விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 15 சனி 29.05.2021 மலர் - 2, இதழ் - 53

# சாதனை புரியும் ஆக்ஸிஜன் எக்ஸ்பிரஸ்

இந்திய ரயில்வே இதுவரை 18 ஆயிரத்து 980 மெட்ரிக் டன் திரவ மருத்துவ ஆக்ஸிஜனை 1,141 டேங்கர்களில் நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களுக்கு வழங்கியுள்ளது. ரயில்வே அமைச்சகம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், 'இதுவரை 284 ஆக்ஸிஜன் எக்ஸ்பிரஸ் ரயில்கள் வெற்றிகரமாக தங்கள் பயணத்தை முடித்து, தமிழ்நாடு, பஞ்சாப், கேரளா, டெல்லி, உத்தரபிரதேசம், உத்தரகண்ட் உள்ளிட்ட 15 மாநிலங்களுக்கு ஆக்ஸிஜன் எக்ஸ்பிரஸ் மூலம்



ஆக்ஸிஜன் நிவாரணம் அளித்துள்ளது. சமீபத்தில் ஆக்ஸிஜன் எக்ஸ்பிரஸ் ஒரே நாளில் இதுவரை இல்லாத அளவாக அதிகபட்ச ஒற்றை நாள் அளவாக 1,195 மெட்ரிக் டன் ஆக்ஸிஜனை கொண்டு சென்றுள்ளது.' என தெரிவித்துள்ளது.


# டிஜிட்டல் மீடியா, ஸ்ட்ரீமிங் தளங்களுக்கு கட்டுப்பாடு



இந்த ஆண்டு பிப்ரவரியில், டிவிட்டர், வாட்ஸப் உள்ளிட்ட சமூக ஊடக தளங்களுடன் சேர்த்து, அமேசான் பிரைம், நெட்பிளிக்ஸ் போன்ற ஓ.டி.டி ஸ்ட்ரீமிங் தளங்களையும், டிஜிட்டல் செய்தி நிறுவனங்களையும் இணைய அடிப்படையிலான பிற வணிக அமைப்புகளையும் கட்டுப்படுத்த புதிய விதிகளை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. இந்த புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளுக்கான ஏற்பாடுகளை செய்ய, தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் 15 நாட்கள் அவகாசம் அளித்துள்ளது.புதிய விதிகளின்படி, டிஜிட்டல் மீடியா நிறுவனங்கள் மூன்று அடுக்கு சுய கட்டுப்பாட்டு அமைப்பை உருவாக்க வேண்டும்.அதன்படி அவை, பாரதத்தைத் தளமாகக் கொண்ட குறை தீர்க்கும் அதிகாரியை நியமிக்க வேண்டும். ஒரு சுய ஒழுங்குமுறை அமைப்பை நிறுவ வேண்டும்.மூன்றாம் நிலைக்கு, அமைச்சகம் மேற்பார்வையில் குறைகளை விசாரிக்க ஒரு குழு அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும், ஸ்ட்ரீமிங் தளங்களுக்கான புதிய வழிகாட்டுதல்களும் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, அரசு எந்தவொரு தணிக்கையையும் அரசே நேரடியாக செய்வதற்குப் பதிலாக, சர்வதேச நடைமுறைக்கு ஏற்ப, அந்த நிறுவனங்களே, சுயமாக நிகழ்ச்சிகளை யு, யு/ஏ, ஏ என்ற மூன்று வகைகளில் வகைப்படுத்தும் வகையிலான வழிகாட்டுதல்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. டிஜிட்டல் செய்தி நிறுவனங்களை பொருத்தவரை, இந்திய பத்திரிகை கவுன்சில் அல்லது கேபிள் தொலைக்காட்சி நெட்வொர்க் ஒழுங்குமுறை சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட பத்திரிகை விதிமுறைகளைக் கடைபிடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# கொரோனா மருந்து 2 டிஜி விலை

ஹைதராபாத்தில் உள்ள டாக்டர் ரெட்டிஸ் ஆய்வகத்துடன் இணைந்து, பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பான டி.ஆர்.டி.ஓ.வின் முன்னணி ஆய்வகமான அணு மருத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிவியல் நிறுவனம் (ஐ.என்.எம்.ஏ.எஸ்)கண்டுபிடித்துள்ள 2 டிஜி மருந்தின் விலை, டாக்டர் ரெட்டிஸ் நிறுவனத்தால் ஒரு பாக்கெட்டுக்கு ரூ.990 என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.இருப்பினும், இந்த மருந்து அரசு மருத்துவமனைகளுக்கு தள்ளுபடி விலையில் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.இதற்கிடையில், 2டிஜியின் இரண்டாவது




தொகுதியை வெளியிட்டது டாக்டர் ரெட்டிஸ் ஆய்வகம்.இந்த மருந்தின் வழக்கமான உற்பத்தி ஜூன் முதல் வாரத்தில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

# பி.எஸ்.பி.பி. பள்ளி விவகாரத்தில் உள்நோக்கமா?



சென்னை கேகே நகர் பகுதியில் இயங்கி வரும் பத்மா சேஷாத்திரி பள்ளி ஆசிரியர் ராஜகோபாலன் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக புகார் அளிக்கப்பட்டதை தொடர்ந்து கைது செய்யப்பட்டார்.இந்நிலையில், இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பா.ஜ.க மூத்த தலைவர் சுப்பிரமணிய சுவாமி, 'பள்ளியில் நடந்ததாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டு குறித்து, விசாரணையை நியாயமான முறையில் மேற்கொள்ள எந்தத் தடையும் இல்லை. அதே சமயம், பள்ளிக்கு எதிராக வன்மத்தோடு சிலர், திராவிடர் கழக முத்திரையுடன் இயங்கி வருவதும், அதை வைத்து, அரசு தரப்பில் நடவடிக்கை எடுக்க முயற்சிப்பது போல, ஒரு தோற்றத்தை உருவாக்குகின்றனர். அது தவறு.ஸ்டாலினின் மனைவி துர்காவின் கடவுள் சிந்தனை, வழிபாடு பலனாகத்தான், ஸ்டாலினுக்கு முதல்வர் ஆகும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதை, அவர் நல்ல வழியில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழகத்தில் நீண்ட காலத்திற்கு பிறகு ஆட்சிக்கு வந்துள்ளதி.மு.க, எல்லா விஷயங்களிலும் தெளிவாக முடிவெடுக்க வேண்டும் இல்லையென்றால் ஆட்சியை கலைக்கும் சூழல் உருவாகும். ஒருவேளை, உள்நோக்கம் கொண்டு செயல்பட்டால் நானே ஆட்சியை கலைப்பேன், கட்டாயம் அதை செய்து காட்டுவேன். இந்தப் பள்ளியில் சீட் கேட்டு சிபாரிசு செய்தவர்கள் பலரையும், நிர்வாகத்தினர் ஆணவத்தோடு அவமரியாதை செய்திருக்கின்றனர். அதெல்லாம் கூட, இந்தப் பிரச்னை பூதாகரமாக்கப்படுவதன் பின்னணியாக இருக்கின்றன.இதன் பின்பாவது பள்ளி நிர்வாகம் ஆணவத்தோடு நடப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.என்னைப் பொறுத்தவரை விசாரணை ஒரு தலைபட்சமில்லாமல் நேர்மையாக நடக்க வேண்டும்.அதில் துளியளவு சந்தேகம் ஏற்பட்டாலும், தமிழகத்தில் விசாரணை நடக்கவிடாமல் செய்து விடுவேன் என்று எச்சரித்துள்ளார்.

# தர்மபுரி மாரியம்மன் கோயில் நிலம் ஆக்கிரமிப்பு




தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி அருகே மோரவள்ளியில் உள்ள மாரியம்மன் கோயிலுக்கு சொந்தமான நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதாகவும் அவற்றை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரி சேலத்தை சேர்ந்த ராதாகிருஷ்ணன் என்பவர் உயர் நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்திருந்தார். அம்மனுவில்,'கோயிலுக்கு சொந்தமாக 2.76 ஹெக்டேர் நிலம் உள்ளது.இதை தனி நபர்கள் பலர் ஆக்கிரமித்து உள்ளனர்.அங்கு கட்டடங்கள் கட்டி வருகின்றனர். கோயில் சொத்துக்களை ஏலம் விடுவதற்கான முயற்சி நடந்து வருகிறது.இது தொடர்பாக கடந்த 2014ல் அறநிலையத்துறை அதிகாரிகளிடம் புகார் அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.மேலும் முறைகேட்டை அம்பலப்படுத்தியதால் எனக்கு மிரட்டல் விடுக்கின்றனர்.நிலத்தை மீட்டு பாதுகாக்க அரசுக்கு உத்தரவிட வேண்டும்' என்று கோரியுள்ளார்.இவ்வழக்கில், ஏல நடவடிக்கைகளை நிறுத்தி வைத்திருப்பதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.இதனையடுத்து, கட்டுமானப் பணிகளை தொடரக்கூடாது, தர்மபுரி மாவட்ட ஆட்சியர் இது குறித்து அறிக்கை அளிக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# வைரமுத்துவுக்கு வலுக்கும் எதிர்ப்பு



நான் மட்டுமல்ல இதேபோல 9 அப்பாவி பெண்களும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர். இதனை எதிர்த்து கடுமையாக போராடி வரும் எனக்கு மனரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், பல இன்னல்கள் வருகின்றன என்று பிரபல திரைப்பட பின்னணிப் பாடகி சின்மயி 'மீ டூ' விவகாரத்தில் வைரமுத்துவின் போலி பிம்பத்தை உடைத்தார். இந்நிலையில், வைரமுத்து மீது குழந்தைகளின் மனதில் பாலியல் எண்ணங்களைத் தூண்டும் வகையில் பாடல் எழுதியதாக, சட்ட உரிமைகள் பாதுகாப்பு மன்றம் புகார் அளித்துள்ளதாக செய்தி ஒன்று வெளியாகியுள்ளது. ஆனால், இதுவரை, தி.மு.கவில் தனக்கு உள்ள அரசியல் செல்வாக்கு மூலம் தொடர்ந்து தப்பி வருகிறார் வைரமுத்து. தற்போது மலையாள கவிஞரும், பாடலாசிரியருமான ஓ.என்.வி குறுப்புவின் பெயரில் இலக்கியத்திற்காக வழங்கப்படும் விருது வைரமுத்துவிற்கு வழங்கப்பட உள்ளது. இதற்கு கேரளாவை சேர்ந்த நடிகை பார்வதி 'பெருமைக்குரிய ஓ.என். வி ஐயாவின் பெயரால் வழங்கப்படும் இந்த விருது, பாலியல் வன்கொடுமை குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்படுவது மிகுந்த அவமரியாதைக்குரியது' என்று பதிவிட்டுள்ளார். பாடகி சின்மயியும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.ஓ.என்.வி அமைப்பும் இது குறித்து மறுபரிசீலனை செய்து வருகிறது.

# டுவிட்டர் தலையில் கொட்டு




'மக்கள் நலனில் டுவிட்டர் மிகவும் அக்கறை வைத்துள்ளது. எங்களது சேவை தொடர்ந்து கிடைக்க பாரத அரசின் சட்டத்திற்கு உட்பட்டு முயற்சிப்போம்' என கூறிக்கொண்டே தொடர்ந்து பாரத அரசுக்கு எதிராக செயல்பட்டு வருகிறது டுவிட்டர் நிறுவனம். 'பாரதத்தின் சில பகுதிகளை சீனாவின் பகுதிகளாகக் காட்டியது, கொரோனாவின் உருமாற்றம் அடைந்த புதிய பி .1.617 வகையை 'இந்திய வகை' என குறிப்பிடும் சொற்களை நீக்க அரசு கூறியும் இன்றுவரை நீக்கவில்லை. அமெரிக்காவின் கேப்பிடல் ஹில்லில் வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக, உடனடியாக அவர்கள் பதிவுகளை நிறுத்திய டுவிட்டர், டெல்லியில் செங்கோட்டையில் விவசாய போராட்டம் என்ற பெயரில் நடந்த வன்முறை சம்பவங்கள் குறித்த பதிவுகளை நீக்கவில்லை. கொரோனா தடுப்பூசிக்கு எதிராக பரப்பப்பட்ட பல பொய்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, மேலும், எவ்வித காரணமும் கூறாமல் கணக்குகளை முடக்குவது, பதிவுகளை நீக்குவது' என பல்வேறு சம்பவங்களை இதற்கு உதாரணமாக கூறலாம்.


இந்நிலையில், 'நீங்கள், லாப நோக்குடன் செயல்படும் ஒரு தனியார் நிறுவனம், பாரதத்தின் சட்டக் கொள்கையில் நுழைந்து ஆணையிட முயற்சிக்காதீர்கள்.உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டுக்கு விதிகளை நிர்ணயிக்கவும், சட்ட நடைமுறைகளை பலவீனமாக்கவும் டுவிட்டர் முயற்சிக்கக்கூடாது. டுவிட்டர் தன் கொள்கைகளில் உறுதியுடன் இருந்தால், அது ஏன் பாரதத்தில் சொந்தமாக ஒரு முறையான, வெளிப்படையான கட்டமைப்பை இதுவரை உருவாக்க முயற்சிக்கவில்லை, பாரதத்தில் இருந்து அதிக வருவாய் ஈட்டினாலும், டுவிட்டர் பாரதத்தை அடிப்படையாகக் கொண்ட குறை தீர்க்கும் முறையை ஏன் நியமிக்க விரும்பவில்லை?' என தகவல் தொழில் நுட்ப அமைச்சகம் கேட்டுள்ளது.

# ஐ.எஸ்.ஐ.எஸ். தொடர்புடையவர் கைது



தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 7 முஸ்லிம் இளைஞர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பின் கீழ் செயல்பட்டு வந்தனர். இவர்கள் கோவையைச் சேர்ந்த ஹிந்து மதத் தலைவர்களை கொலை செய்யவும் திட்டமிட்டிருந்தனர்.இந்த தகவலையடுத்து, அந்த 7 பேரையும் கடந்த 2010ம் ஆண்டில் என்.ஐ.ஏ கைது செய்து விசாரித்தது.பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கு பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், முதல் குற்றவாளியான முகமது ஆசிக் என்பவன் தலைமறைவாகியிருந்தான்.அவனை காவல்துறையினரும் என்.ஐ ஏவும் தீவிரமாக தேடி வந்த நிலையில், மயிலாடுதுறைஅருகேயுள்ள நீடூரில் உள்ள ஒரு கோழிக்கடையில் வேலை செய்து வந்து தெரிய வந்தது.அங்கு சென்ற என்.ஐ.ஏ அதிகாரிகள் ஆசிக்கை கைது செய்து, விசாரணைக்காக சென்னை அழைத்து வந்தனர்.

# மைத்ரி திட்டத்தின் பலன்



நமது பரத அரசு 'மைத்ரி' திட்டத்தின் கீழ் சுமார் 70க்கும் மேற்பட்ட பல்வேறு ஏழை நாடுகள், அண்டை நாடுகளுக்கு கொரோனா தடுப்பூசியை வழங்கியது. தற்போது பாரதம் கொரோனாவின் இரண்டாவது அலையில் சிக்கியுள்ளபோது, அனைத்து நாடுகளும் போட்டி போட்டு பாரதத்திற்கு உதவ முன்வந்திருப்பதற்கு அதுவே முக்கிய காரணம்.அந்த வகையில், பஞ்சாப் நேஷனல் வங்கி ஊழலில் பாரதத்தில் இருந்து தப்பியோடிய வைர வியாபாரி மெஹுல் சோக்ஸி ஆன்டிகுவாவில் தஞ்சம் அடைந்தார்.அவரை அந்த நாடு பாரதத்திற்கு நாடு கடத்த முடிவெடுத்த சூழலில், அவர் அங்கிருந்து தப்பினர்.அவர் கியூபாவிற்கு சென்றிருக்கலாம் என கூறப்பட்ட சூழலில், டொமினிகாவில் கண்டுபிடிக்கப்பட்டார். அவர் அங்கிருந்து விரைவில் பாரதத்திற்கு அனுப்பப்படுவார் என அந்த நாடு கூறியுள்ளது. இந்த இரு நாடுகளும் இந்த விஷயத்தில் பாரதத்திற்கு உதவ நமது அரசின் வெளியுறவுக் கொள்கையின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்றாலும் 'மைத்ரி' தடுப்பூசி திட்டம்தான் இதற்கான முக்கிய காரணங்களுல் ஒன்றாக உள்ளது.

# கொரோனா பாதிப்பில்லா கிராமங்கள்

குருகிராம் சுகாதாரத் துறையின் நடவடிக்கையால், அங்குள்ள 13 கிராமங்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்படாமல் இருப்பது தெரியவந்துள்ளது.கிராமப்புறங்களில் வீடு வீடாக சோதனை செய்யும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி வரும் குருகிராம் சுகாதாரத் துறையின் நடவடிக்கையால் இது சாத்தியமாகியுள்ளது என கூறும் துணை கமிஷனர் யஷ் கார்க், மற்ற பகுதிகளில் அதிகபட்சமாக தொற்றுநோய்கள் பதிவாகின்ற நிலையில், பூஜ்ஜிய கொரோனா பாதிப்புகள் உள்ள 13 கிராமங்கள் மாவட்டத்திற்கு ஒரு பெரிய நிவாரணம் எனத் தெரிவித்துள்ளார். மாவட்டத்தின் 166 கிராமங்களிலும் ஒரே நேரத்தில், அங்கன்வாடி தொழிலாளர்கள் மற்றும் ஆஷா தொழிலாளர்கள் அடங்கிய சுகாதாரத் துறை குழுக்கள், மே 15 முதல்மக்களிடம் கொரோனா சோதனை மேற்கொண்டு வருகின்றன.



## ராணுவத்தினருக்கு மருத்துவ இணையதளம்

கொரோனா தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள ராணுவத்தினர், முன்னாள் ராணுவத்தினர் உள்ளிட்டோர், இணைய வழியில் மருத்துவ ஆலோசனைகளை பெறுவதற்கான பிரத்தியேக இணையதளத்தை, ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் துவக்கி வைத்தார். அப்போது அவர், 'பாரதத்தில் கொரோனா இரண்டாவது அலை காலத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியில் ராணுவத்தினர் மக்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்துவதில் ராணுவத்தினர் ஆற்றி வரும் சேவை மகத்தானது.கொரோனா தொற்றிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம்.அவர்கள் மருத்துவமனைகளுக்கு



செல்லாமல் ஆன்லைனிலேயே மருத்துவ ஆலோசனைகளை பெற, இந்த இணையதளம் உதவிகரமாக இருக்கும்.' என தெரிவித்தார்.மேலும், 10 ஆயிரம் பாக்கெட்டுகள் '2டிஜி' கொரோனா தடுப்பு மருந்து விற்பனையையும் இணையத்தில் துவக்கி வைத்தார்.

## நியூயார்க் டைம்ஸ் அறிக்கைக்கு மறுப்பு

நியூயார்க் டைம்ஸ் சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாரதத்தில் உண்மையான கொரோனா இறப்பு எண்ணிக்கை புள்ளிவிவரங்களுக்கு முரணானது மற்றும் உண்மையான இறப்புகள் 42 லட்சம் வரை இருக்கலாம் என்றும் கூறியுள்ளது.இந்த அறிக்கையை 'முற்றிலும் ஆதாரமற்றது மற்றும் தவறானது' என்று மத்திய சுகாதார அமைச்சகம் நியூயார்க் டைம்ஸ் அறிக்கைக்கு மறுப்புத் தெரிவித்துள்ளது.மேலும், இந்த அறிக்கைக்கு எந்த ஆதாரங்களும் இல்லை, உண்மையான மதிப்பீடுகளின் அடிப்படையில் இல்லை' என்றும் தெரிவித்துள்ளது.முன்னதாக, கடந்த 20 நாட்களாக இந்தியாவில் புதிய தினசரி கொரோனா பாதிப்புகளின் எண்ணிக்கையில் சரிவு ஏற்பட்டுள்ளது.நாட்டின் மீட்பு 90 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.கடந்த வாரம் முதல் 24 மாநிலங்களில் நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# ஜெய்சங்கர் குற்றச்சாட்டு



அரசு முறைப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள ஜெய்சங்கர், அந்நாட்டு முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மெக்மாஸ்டருடன், ஹூவர் நிறுவனத்தின் கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்றார். அப்போது 'கொரோனாவால் பாரதம் கடுமையான நெருக்கடியை சந்தித்துள்ளது.எனினும் அமெரிக்க மக்கள் தொகையை விட, இரண்டரை மடங்கு அதிகமுள்ள மக்களுக்கு, மத்திய அரசு பாரபட்சமின்றி இலவச உணவுப் பொருட்களும், வங்கிக் கணக்கில் நேரடியாக பணமும் வழங்கி வருகிறது. ஆனாலும், மத்திய அரசை வேறு மாதிரியாக சித்தரிக்க அரசியல் ரீதியில் பல்வேறு முயற்சி நடந்து வருகின்றன.பாரத மக்கள் ஜனநாயகத்தில் முழு நம்பிக்கை வைத்துள்ளனர்.கடந்த காலத்தில் ஒருவரின் அடையாளம், நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் ஓட்டு வங்கி அரசியல் நடந்துவந்தது.ஆனால், இப்போது அப்படி அல்ல. அனைத்து மதத்தினரும் சமமாக மதிக்கப்படுகின்றனர். மதசார்பின்மை என்பது, யாருடைய மத நம்பிக்கைக்கும் எதிராக இருக்கக் கூடாது.மத்திய அரசின் நிர்வாகம் குறித்து உண்மையான மதிப்பீடு செய்யும்போது இது குறித்த உண்மை அனைவருக்கும் தெரியவரும்' என பேசினார்.

# அரசு விதிகளை கூகுள் மதிக்கும்

ஆசிய பசிபிக் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தியாளர்களுடன் ஒரு மெய்நிகர் மாநாட்டில் பேசிய கூகுள் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை, 'பாரத அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வகுத்துள்ள வழிகாட்டுதல்களுக்கு இணங்கி நடக்க கூகுள் உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்தார். மேலும், பன்னாட்டு இணையம் மற்றும் தொழில்நுட்ப சட்டங்களை கூகுள் மதிக்கிறது.அந்தந்த நாட்டின் அரசாங்க சட்டங்கள், கோரிக்கைகளுக்கு இணங்கியே குகுள் செயல்படுகிறது.இது நிறுவனத்தின் வெளிப்படைத்தன்மை அறிக்கைகளிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.' என தெரிவித்தார்.




புதிய தகவல் தொழில்நுட்ப விதிகள் கருத்துச் சுதந்திரத்தையும் தனியுரிமைக்கான உரிமையையும் மீறுவதாக டுவிட்டர், வாட்ஸ்அப் போன்றவை புலம்பி வரும் நேரத்தில் சுந்தர் பிச்சையின் கருத்துக்கள் வெளியாகியுள்ளன என்பது கவனத்தில் கொள்ளத் தக்கது.

# சீனாவிற்கு எதிராக அமெரிக்கா



சீனாவின் வூஹான் நகரில், இருந்து பரவிய கொரோனா வைரசால் இதுவரை உலகெங்கும் சுமார் 17 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 35 லட்சத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்து உள்ளனர்.இதனால் உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார இழப்புகள், பின்னடைவுகள், வேலை இழப்புகள் என தொடரும் பாதிப்புகள் ஏராளம்.வூஹானில் உள்ள விலங்குகள் சந்தையில் இருந்து வைரஸ் பரவியதாக சீனா கூறி வருகிறது.ஆனால், வூஹான் வைரஸ் ஆய்வு மையத்தில் இருந்து கொரோனா வைரஸ் பரவியது என, உலக நாடுகள் அறுதியிட்டு கூறி வருகின்றன. இது தொடர்பாக விசாரித்த உலக சுகாதார அமைப்பும் அதன் தலைவர் டெட்ராஸ் அதானமும் 'வூஹான் ஆய்வு மையத்தில் இருந்து வைரஸ் பரவியதற்கு வாய்ப்பில்லை' என சீனாவுக்கு ஆதரவாக கூறியவருகின்றனர். ஆனால், அதனை உலக நாடுகள் நம்பவில்லை. இந்நிலையில், வைரஸ் பரவலுக்கான காரணம் குறித்து, அமெரிக்க புலனாய்வு அமைப்புகள் விசாரணை நடத்தின. 'பரவலுக்கான காரணத்தை உறுதிப்படுத்த முடியவில்லை ஆனால், வூஹான் வைரஸ் ஆய்வு மையத்தில் பணியாற்றிய பல ஆராய்ச்சியாளர்கள், 2019ல் கொரோனா போன்றதொரு நோயால் உடல்நலம் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதையடுத்து, வைரஸ் பரவலுக்கான காரணம் குறித்து தீவிர விசாரணையை துரிதப்படுத்தி விசாரணை அறிக்கையை 90 நாட்களுக்குள் அளிக்க உளவு அமைப்புகளுக்கு உத்தரவிட்டுள்ளார் அமெரிக்க அதிபர் ஜோ பைடன். மேலும், வைரஸ் பரவலுக்கான முழு காரணம் தெரிய ஒத்துழைக்கும்படி நட்பு நாடுகளுடன் இணைந்து சீனாவுக்கு நெருக்கடி தருவோம் என அவர் கூறியுள்ளார்.

# இஸ்ரேலில் தொடரும் பயங்கரவாதம்

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன பயங்கரவாத அமைப்பான ஹமாசுக்கும் சமீபத்தில் நிகழ்ந்த மோதலையடுத்து அங்கு பல உலக நாடுகள் முயற்சியில் போர்நிறுத்தம் ஏற்பட்டது.எனினும், பயங்கரவாத அமைப்பபான ஹமாஸ் இஸ்ரேல் மீது பயங்கரவாத தாக்குதல்களைத் தொடர்ந்துகொண்டுதான் உள்ளது என இஸ்ரேலில் நடக்கும் நிகழ்வுகள் உணர்த்துகின்றன.ஜெருசலேமில் அம்யூனேஷன் ஹில் பகுதியில் கடந்த திங்கட்கிழமையன்று இஸ்ரேல் தேசிய காவல் தலைமையகத்தின் முன்பு உள்ள ஸ்லோமோ சல்மான் ஷ்ராகா தெருவில் 20 வயது மதிக்கத்தக்க இரண்டு இஸ்ரேலியர்கள் கத்தியால் குத்தப்பட்டனர்.அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு சிகிச்சைக்கு அனுப்பப்பட்டனர்.

'ஹமாஸ் மற்றும் பி.எல்.ஓ அமைப்புகள் இதற்கு பொறுப்பு இல்லை என்று பாலஸ்தீனிய ஊடகங்கள் கூறுகின்றன.ஆனால் பாலஸ்தீனிய அரசு அந்த ஜிஹாதியின் குடும்பத்திற்கு பணத்தை கொடுத்துவிடும். பயங்கரவாதிகளுடனான போர்நிறுத்தம் என்பது ராக்கெட் போன்ற தாக்குதல்களுக்குத்தானே தவிர, ஹமாஸ் பயங்கரவாதிகள் இஸ்ரேலியர்களை கொல்ல முயற்சிப்பதை முழுமையாக நிறுத்திவிட்டார்கள் என்ற பொருள்

அல்ல. ஹமாஸ் தலைமை, யூத அரசுக்கு எதிராக 'ஜிஹாத்' தொடரும் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளது. இஸ்ரேல் மீதான தாக்குதல்களை ஈரான் ஆதரிக்கிறது. பயங்கரவாதிகள் இஸ்ரேலின் முக்கிய நகரங்கள் மீது நிகழ்த்தும் ராக்கெட் தாக்குதல்கள் முதல் அவ்வப்போது நடைபெறும் துப்பாக்கிச் சூடு, கத்தியால் குத்தி கொலை செய்தல்வரை அனைத்தையுமே தொடர்ந்துகொண்டேதான் இருக்கிறார்கள். இஸ்ரேல் மீண்டும் போராடி பயங்கரவாதிகளைக் கொல்லும் வரைஊடகங்கள் இதைப் பற்றி பேசாது' எனடேனியல் கிரீன் குறிப்பிட்டுள்ளார்.



# யார் இந்த வினோத் பாபாஜீ



ஆர்.எஸ்.எஸ் என்று சொல்லக்கூடிய தேசபக்தி இயக்கத்தில் தங்களை சிறுவயதிலருந்து தன்னை முழுமையாக அர்ப்பணித்து கொண்டவர். இதைத்தவிர, ஹிந்துமுண்ணனி , விஷ்வ ஹிந்து பரிஷத், பா.ஜ.க போன்ற அமைப்புகளிலும் முழு ஈடுபாட்டுடன் கலந்து கொள்வார். வண்டலூர் பகுதியில் நமது ஹிந்து சமுதாயப் பணிகளை உற்சாகமாக செய்தவர். யார் எந்த உதவிகள் கேட்டாலும் ஓடோடி சென்று உதவக்கூடியவர்.கடந்த 2020 கொரோனா ஊரடங்கின்போது தனது வீட்டிலியே உணவு தயாரித்து கொடுத்து பலரின் பசியினை போக்கியவர். படப்பை அருகே மண்ணில் புதைந்து கிடந்த சிவலிங்கத்தை எடுத்து சித்தபுரிஸ்வரர் என்று பிரதிஷ்டை செய்தது, அயோத்தி ராமர் கோயில் கட்டுமான நிதி சேகரிப்பு என ஆன்மீக விஷயங்களிலும் ஈடுபாடு அதிகம். இதைத்தவிர மதமாற்றம் தடுப்பு, ரத்ததானம், பண்பாட்டு வகுப்பு என இவர் ஈடுபடாத தொண்டுகளே இல்லை எனலாம்.ஆனால், திடீரென சில நாட்களாக கொரோன நோயினால் அவதிப்பட்டு தாம்பரம் ஹிந்து மிஷன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருநதார் வினோத்பாபாஜீ.அந்த செய்தியை கேட்டு அவரது தந்தை மாரடைப்பால் காலமானார்.( உடல் நலம் கருதி அந்த தகவல்கூட வினோத்பாபாஜீக்கு தெரிவிக்கப்படவில்லை). அவர் மீண்டும் உடல் நலம் தேறி வருவார் என அனைவரும் எதிர்பார்த்து இருந்த நிலையில், நேற்று புதன் இரவு 8.45 மணியளவில் அனைவரையும் மீளா துயரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்தார் வினோத்பாபாஜீ. அவருக்கு கடந்த 2016ல் திருமணமாகி 2 பெண் குழந்தைகள் உள்ளனர்.அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.அவரின் ஆன்ம நற்கதி அடைய பிரார்த்திப்போம்.

# அடுத்தடுத்த சர்ச்சையில் ஐ.எம்.ஏ

நாட்டிலுள்ள அலோபதி மருத்துவர்களின் தனியார் சங்கமான இந்தியன் மெடிக்கல் அசோசியேஷன் (ஐ.எம்.ஏ) சமீப காலமாக தேவையற்ற சர்ச்சைகளில் சிக்கி வருகிறது.அவ்வகையில், சமீபத்தில் தான் சான்றளித்த பொருட்களுக்கு ஈடாக பெரும் பணத்தை ஐ.எம்.ஏ பெற்றதாக புதிய சர்ச்சை எழுந்துள்ளது.

**பெப்சிகோ:**

ஐ.எம்.ஏ எந்த விஞ்ஞான அடிப்படையில் இந்த தயாரிப்புகளுக்கு சான்றளித்தது என யாருக்கும் தெரியவில்லை.அது ஆராய்ச்சி செய்யப்பட்டு அறிவியல் இதழ்களில் வெளியிடப்பட்டதா, ஆய்வு தொடர்பான விவரங்கள் ஐ.எம்.ஏ கைவசம் உள்ளதா அப்படியெனில் ஏன் வெளியிடவில்லை எனவும் தெரிவிக்கப்படவில்லை. ஆரம்பத்தில், இந்த ஒப்புதலுக்காக பெப்சிகோ நிறுவனம் பணம் எதுவும் செலுத்தவில்லை என்று ஐ.எம்.ஏ கூறியது.ஆனால், அதற்கு பதிலாக, பெப்சிகோ மூன்று ஆண்டுகளாக சங்கத்தின் மாநாடுகள் மற்றும் கூட்டங்களுக்கு நிதியுதவி அளித்திருந்தது தெரியவந்தது.பின்னர், பெப்சிகோவின் தயாரிப்புகளுக்கு ஒப்புதல் அளிக்க ஐ.எம்.ஏ ரூ.2.25 கோடியை வசூலித்ததும் ஊடக அறிக்கைகள் வாயிலாக வெளியானது.

**கிராம்ப்டன், ஏசியன்:**

விஞ்ஞானத்தை வலியுறுத்தும் ஐ.எம்.ஏ, 85 சதவீத கிருமிகளைக் கொல்வதாகக் கூறும் பாக்டீரியா எதிர்ப்பு எல்.ஈ.டி விளக்கிற்கு சான்றளித்தது. மேலும், ஏசியன் ராயல் வர்ணம் பூசப்பட்ட சுவரின் மேற்பரப்பில் இரண்டு மணி நேரத்திற்குள் 99 சதவீத தொற்றுநோயை ஏற்படுத்தும் பாக்டீரியாக்களைக் கொல்வதாகக் கூறும் ஒரு உட்புற வண்ணப்பூச்சுக்கும் சான்றளித்தது. ஆனால், இந்த ஒப்புதலுக்குப் பின்னால் உள்ள விஞ்ஞான ரீதியான பகுத்தறிவு குறித்து ஐ.எம்.ஏவிடம் இருந்து இதுவரை எந்த பதிலும் இல்லை.


**டெட்டால்:**

டெட்டால் கிருமி நாசினி, சோப்பு உள்ளிட்டவைகளுக்கு இந்திய மருத்துவ சங்கத்தின் ஒப்புதல் இருக்கிறது என ரெக்கிட் ஒளிபரப்பும் பல விளம்பரங்களில் நாம் கண்டிருக்கலாம். அதில், குறிப்பிட்ட தயாரிப்பு மற்ற பிராண்டுகளை விட 10 மடங்கு அதிகமாக தொற்றுநோயிலிருந்து மக்களைப் பாதுகாக்கிறது என சொல்லப்படுகிறது.ஆனால், எந்த குறிப்பிட்ட பிராண்டுகள் என்ற விவரமோ அல்லது அதை நிரூபிக்கத் தகுந்த எந்த அறிவியல் அடிப்படை ஆதாரத்தையும் ஐ.எம்.ஏ இதுவரை வெளியிடவில்லை.

**கென்ட்:**

கடந்த 2015ம் ஆண்டில் 'கென்ட்' என்ற குடிநீர் சுத்திகரிப்பானுக்கு ஒப்புதல் அளித்த பின்னர், 2016 நவம்பரில் டில்லியில் ஏற்பாடு செய்யப்பட்ட நூற்றாண்டு மாநாட்டிற்கான ஸ்பான்சர்ஷிப், புரிந்துணர்வு ஒப்பந்தம் என இந்திய மருத்துவ சங்கம் அடுத்தடுத்த பல சிக்கல்களை சந்தித்தது. இதனால், 'இது ஒரு ஒப்புதல் அல்ல, ஆனால், நீரினால் பரவும் நோய்களை தடுக்கவும் பாதுகாப்பான நீரைப் பயன்படுத்துவதற்காகவுமான ஒரு பொது பிரச்சாரம்' என ஐ.எம்.ஏ கூறி சர்ச்சைகளுக்கு ஒரு தற்காலிக முற்றுப்புள்ளி வைத்தது.

இதனைத்தவிர கடந்த சில நாட்களாக வேறு சில சர்ச்சைகளையும் சந்தித்து வருகிறது புதியத் தலைவர் ஜெயலால் தலைமையிலான ஐ.எம்.ஏ.




**பாரம்பரிய மருத்துவம் குறித்த கிண்டல்:**

யோகா குரு பாபா ராம்தேவ் கேட்ட 25 நியாயமான கேள்விகளுக்கு இதுவரை ஐ.எம்.ஏ பதில் அளிக்கவில்லை ஆனால், அதற்கு முன் அவர் கூறிய கருத்துக்கு அவர் மன்னிப்பு கேட்ட பிறகும் அவரையும் ஆயுர்வேதம் உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவ முறைகளையும் மிரட்டும் விதமாக பாபா ராம்தேவிடம் ரூ. 1,000 கோடி கேட்டு நோட்டீஸ் அளித்துள்ளது ஐ.எம்.ஏ. மேலும் பாரம்பரிய மருத்துவங்களை போலி மருத்துவம் என பொருள்படும் விதத்தில் குவாக்கர் (quackery) எனவும் கருத்து தெரிவித்தது ஐ.எம்.ஏ. ஆயுஷ் அமைச்சகம் அறிவித்த கூட்டு மருத்துவமுறை, ஆயுர்வத மருத்துவர்கள் பயிற்சி பெற்று அறுவை சிகிச்சை மேற்கொள்வது உள்ளிட்ட பல யோசனைகளை உரிய தெளிவான காரணங்கள் இன்றி எதிர்த்தது ஐ.எம்.ஏ.

**மதமாற்றப் பிரச்சாரம்:**

இந்திய மருத்துவ சங்கத்தின் தலைவரான டாக்டர். ஜான்ரோஸ் ஆஸ்டின் ஜெயலால், நோயாளிகளையும், சக மருத்துவர்களையும், மருத்துவ ஊழியர்களையும் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றுவதாக கொரோனா தொற்றுநோயையும் தன் பதவியையும் பயன்படுத்த முயற்சிப்பதாக குற்றம் சாட்டப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றவர்களை குற்றம் சொல்வதற்கு முன்னால், கிண்டல் செய்வதற்கு முன்னால் இந்த குற்றச்சாட்டுகளுக்கு உரிய விளக்கம் அளிக்குமா இந்தியன் மெடிக்கல் அசோசியேஷன்!?

*(ஓப் இந்தியா செய்தியைத் தழுவிய கட்டுரை)*

மதிமுகன்

விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006